படாத நிலையிலிருப்பதாலும், பெரணமல்லூர், நெடுங்குணம் பிர்க்காக்களில் நிலங்களுக்கு செய்யாற்றிலிருந்து பாசன வசதி கொடுக்க 1969-ல் ஆய்வு செய்யப்பட்ட திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தண்டரை அணைக்கட்டு முடிந்த பிறகுதான் இது கவனிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, செய்யாற்றிலே கட்டப்படும் அந்தத் தண்டரை அணைக்கட்டு இன்னும் வேலை துரிதமாக நடக்காமல் மத்திய சர்க்காரில் ஏதோ சில பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியென்றால் தண்டரை அணைக்கட்டு வேலையை விரைவில் முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தண்டரை அணைக்கட்டுத் திட்டம் அனுமதிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். ஏற்கெனவே வேலைகள் தொடங்கியிருக்கிறது. வேலை துரிதமாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசாங்கத்திற்கும் நமக்கும் தகராறு கிடையாது.

திரு. தொ. ப. சினிவாசன் : தலைவரவர்களே, தண்டரை அணைக்கட்டுத் திட்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே பத்தாண்டுகளுக்கு முன்பு போட்ட கமண்டலநாக நதியில் செண்பகத் தோப்பில் அணைக்கட்டும் திட்டம் இந்த தண்டரை அணை கட்டுவதால் நிறுத்தி வைக்கப்படும் என்று அதிகாரிகள் சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கமண்டலநாக நதி திட்டத்தைப் பற்றித் தனியாகக் கேள்வி போடவும்.

Renaming Tuticorin Port

* 712 *Q.*—THIRUMATHI T. N. ANANTHANAYAKI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government had requested the Centre for naming the Tuticorin Port after the great patriot and freedom fighter V.O. Chidambaram Pillai ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தூத்துக்குடியில் கட்டப்பட்டு வரும் புதிய துறைமுகத்திற்கு வி. ஓ. சி. துறைமுகம் என்று பெயர் சூட்டவேண்டுமென்ற தூத்துக்குடி நகராட்சி மன்றத் தீர்மானத்தை மத்திய சர்க்காரின் கவனத்திற்கு தமிழக அரசு 1971-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ம் நாளன்று அனுப்பியுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், தீர்மானத்தை அனுப்பினால் மட்டும் போதாது. கப்பலோட்டிய தமிழனின் பெயரில் துறைமுகம் வைக்க வெகு சீக்கிரத்தில் நேரடியாகவாவது சென்று, அமைச்சர் டெல்லிக்குச்சென்று ஞாபகப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கப்பலோட்டிய தமிழனுக்கு சிலை வைக்காமல் இருந்தது அந்தக் காலம், சிலை வைத்துப் பாராட்டுவது இந்தக் காலம். ஆகவே கப்பலோட்டிய தமிழனின் பெயரில் துறைமுகம் ஏற்பட வேண்டுமென்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சிலை வைப்பதிலே எங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை. துறைமுகம் வைப்பதில் தான் அதிக நம்பிக்கை உண்டு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த நம்பிக்கையை நேரு வந்து இங்கு சிலை திறந்தபொழுது தெரிவித்திருக்கவேண்டும்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : தலைவரவர்களே, இந்திய சுதந்திரப் போராட்டத்தின்பொழுது ஜெர்மனியில் ராஷ்பிஹாரி கோஷ் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தாலும் உலகப் பெரும் போரில் எம்டன் என்ற நீர் மூழ்கிக் கப்பல் நமது துறைமுகத்திற்கு வந்தபொழுது உயர்நீதி மன்றத்திலிருந்து குண்டு வீசியவரும் மாவீரருமான சண்பகராமன் பிள்ளையின் பெயரை சென்னை துறைமுகத்திற்கு வைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவுமில்லை.

டிராக்டர் தொழிற்சாலை.

*** 713 வினா.—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாட்டில் ஹங்கேரி நாட்டு உதவியுடன் டிராக்டர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஹங்கேரி நாட்டு உதவியுடன் டிராக்டர் தொழிற்சாலை ஒன்றை தமிழ்நாட்டில் அமைப்பதுபற்றி 1969-ம் ஆண்டு நவம்பர் திங்களில் அந்நாட்டுத் தொழில் அதிகாரிகளுடன் பேச்சு நடந்தது. ஆனால் இதற்கான மத்திய அரசு அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ந. வீராசாமி : ஹங்கேரி நாட்டுடன் பேச்சு வார்த்தை நடத்தி டிராக்டர் தொழிற்சாலையை உருவாக்கும் செயற்குறிப்பின்படி எந்த இடத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இதற்கான பேச்சு வார்த்தை ஹங்கேரி நாட்டு அதிகாரிகளுடன் நடைபெற்று தமிழ்நாட்டில் அதை நிறுவுவது பற்றி நல்ல கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் இதற்கான மத்திய அரசின் அனுமதி ராஜஸ்தான் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.